# குசலான்மலைப் பிரதேசத்தின் தொல்லியல் மூலங்களும் வாழ்வியலும் - ஆவணப்படுத்தல்

EXAMINATION
FACULTY OF
CULT
21 JAN 2019
Eastern University, Sri Lanka.

பெயர் : செல்வன் க.சிவபாலன்

பதிவு இலக்கம் : EU/IS/2012/AC/66

சுட்டெண் : CS 4936

LIBRARY
07 SEP
EASTERN UNIVERSITY, SRI LANKA.

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணிச் சிறப்புக் கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அங்கமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

FAC695
Project Report
Library - EUSL

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2018.

# முன்னுரை

தென்னாசியாவின் தென்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழும் நாடுகளில் ஒன்றான இலங்கை தனக்கே உரித்தான தனித்துவமான வரலாற்றையும், பண்பாட்டையும் கொண்டு காணப்படுகின்றது. தென்னாசியாவில் தொடர்ச்சியான இலக்கியம் மரபு கொண்ட நாடு என்ற சிறப்பைக் கொண்ட இலங்கைத் தீவின் அமைவிடம், பௌதீக மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றின் காரணமாக, ஆரம்பகாலம் தொட்டு பல நாட்டவர்களும் இத்தீவின் மீது தமது ஆதிக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டனர். இதன் விளைவாக ஈழத்துப் பண்பாடுகளோடு பிறநாட்டுப் பண்பாடுகள் கலப்புற்று, பல நாட்டுப் பண்பாடுகளோடு இணைந்த வகையில் ஈழத்தின் பண்பாடும், வரலாறும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவிய போது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும், புதிய பண்பாடுகளும் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாக பாளி இலக்கியங்களில் கூறப்பட்டாலும் அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் நாகரிகமடைந்த பண்பாட்டு வரலாறு கொண்ட மக்கள் வாழ்ந்தமை, நம்பகரமான தொல்லியல் மூலாதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவை இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் புதிய பரிணாமத்தையும் திருப்பத்தையும் தோற்றுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் அமைந்துள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதாக காணப்படும் குசலான்மலை பிரதேசத்தினை மையப்படுத்தி "குசலான்மலைப் பிரதேசத்தின் தொல்லியல் மூலங்களும் வாழ்வியலும் ஆவணப்படுத்தல்" எனும் தலைப்பின் கீழான ஆய்வுக்கு பல மூலாதாரங்கள் முன்னோடியாக அமைந்து காணப்பட்டன. அந்தவகையில் இம்மலைப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொல்லியல் மூலங்களான பிராமிக் கல்வெட்டுக்கள், கற்தூண்கள், கட்டட இடிபாடுகள், மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட நீர்த்தடாகம், கருங்கற்களாலான படிக்கட்டுக்கள், கற்குகைகள், நீர்வடி விளிம்புகள், கரடியன்குளம் முதலான தொல்லியல் அம்சங்களும் மேலும் அப்பிரதேச மக்களின் வாழ்வியல் அம்சங்களான தொழில், பண்பாடு, உணவு, கலை மரபு, திருமண முறை, திருவிழாக்கள், கல்வி, மதநம்பிக்கை முதலான வாழ்வியல் சார் அம்சங்களும் இப்பிரதேசம் சார்ந்த வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு ஆய்வின் முக்கிய ஆதாரங்களாக விளங்கியது. மேலும் இப்பிரதேசம் சார்ந்து எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகை, கட்டுரைகள் முதலானவையும் ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

பல அரிய வரலாற்றுத் தடயங்களை கொண்ட இப்பிரதேசத்தினை மையப்படுத்தி இதுவரை முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் இப்பிரதேசத்தின் வரலாற்று சின்னங்கள் மற்றும் வாழ்வியல் அம்சங்கள் முதலானவற்றை

ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது. எதிர்காலத்தில் இது போன்ற ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு பல புதுமைகள் படைக்க விரும்பும் எதிர்கால சந்ததியினருக்கும் திடமான ஓர் அடித்தளமாகவும் வழிகாட்டியாகவும் இவ்வாய்வு அமையும் என நம்புகிறேன்.

-ஆய்வாளர்-

## பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
| --- | --- |
| முன்னுரை | i - ii |
| நன்றியுரை | iii |
| அத்தியாயம் : 01 ஆய்வு அறிமுகம் | 01 - 05 |
| அத்தியாயம் : 02 தொல்லியல் அம்சங்கள் | 06 - 27 |
| அத்தியாயம் : 03 வாழ்வியல் அம்சங்கள் | 28 - 37 |
| அத்தியாயம் : 04 முடிவுரை | 38 - 40 |
| உசாத்துணை | 41 - 43 |
| பின்னிணைப்பு | iv - vi |